**Illustration:1**

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, THENI.**

**Case No: SC 124/2024**

**Prosecution Witness 1 (LW 1)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.முருகேசன் | ஜாதி | : | -- |
| அப்பா பெயர் | : | கருப்பண்ணன் | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | -- |
| தாலுகா /மாவட்டம் | : | | வயது | : | /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 24.01.2025

( எதிரிகள் ஆஜர்)

(சாட்சி அழைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட போலீசாரால் அடையாளம் காணப்பட்டு ஓட்டுநர் உரிமம் மூலம் ஒப்பீடு செய்யப்பட்டு பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

முதல் விசாரணை

1. நான் தற்சமயம் போடி, புது காலனி ஜெயம் நகரில் குடியிருக்கிறேன். என் மனைவி யோக மலர் மற்றும் குழந்தைகளுடன் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 16.10.2023-ம் தேதிக்கு முன்பு சுமார் ஒரு வாரத்திற்கு முன் எனக்கும் என் மனைவி யோக மலருக்கும் இடையே இரவு சுமார் 10.00 மணி அளவில் சண்டை வந்தது. 1-வது எதிரி என் வீட்டிற்கு கிழக்கு பக்கம் குடியிருக்கிறார்கள். மற்றவர்கள் எங்கு குடியிருக்கிறார்கள் என்று தெரியாது. ஆனால் ஆட்களை தெரியும்.

2. நானும், என் மனைவியும் சண்டை செய்யும் பொழுது 1-வது எதிரி தமிழன் (எ) இளந்தமிழன் தடுக்க வந்தார். நான் என் குடும்ப சண்டையில் வராதே என்றேன். அதன் பிறகு எங்கு பார்த்தாலும் என்னை முறைப்பது, சட்டை காலரை தூக்கி விடுவது என செய்தார். நான் மன்னிப்பும் கேட்டு விட்டேன். போடி பஸ் ஸ்டாண்டிற்கு நான் ராஜேஷ் என்பவர் கடைக்கு நான் பணி செய்வது சம்மந்தமாக பணம் வாங்குவதற்காக 16.10.2023 அன்று காலை 11.00 மணிக்கு என்னுடைய ஓர்க் ஷாபில் இருந்து கிளம்பி அண்ணாமலை பர்னிச்சர் கடைக்கு வந்தேன்.

3. ராஷேஸ் இடம் சுமார் ரூ.1200/- பெற்றுக் கொண்டு திரும்பும் பொழுது 1-வது எதிரி அருவாளை வைத்து வலது தோள் பட்டையில் வெட்டினார். மீண்டும் வந்த பொழுது நான் தடுத்தேன். அந்த வெட்டு எனது வலது கை பெரு விரலுக்கும் முதல் விரலுக்கும் நடுவே விழுந்தது. 2, 3 எதிரிகள் மற்றும் ராஷேஸ் ஆகியோர் 1-வது எதிரியை தடுத்து வெளியே கூட்டி வந்தார்கள். 2-வது எதிரி கத்தியை கொண்டு வந்தார். ஆனால் ஒன்றும் செய்யவில்லை.

4. எனக்கு வெட்டு விழுந்த உடன் இரத்தம் வந்தது. என் காவி வேஷ்டி மற்றும் பச்சை கலர் சட்டை முழுவதும் இரத்தம் படிந்தது. அவர்கள் எதிரிகள் சென்ற உடன் என் போன் மூலம் அங்கு வேலை செய்து கொண்டிருந்த ஒருவர் மூலம் என் தம்பி இளங்கோவிற்கு நடந்ததை சொல்ல சொன்னேன். அந்த பஜாஜ் ஷோரூமில் வேலை செய்த ஒரு நபர் என்னை போடி, அரசு மருத்துவமனைக்கு கூட்டி சென்றார். அங்கு என் தம்பி மற்றும் அனைவரும் வந்தார்கள். அங்கு சிகிச்சை பெற்று மேல் சிகிச்சைக்காக க.விலக்கு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள்.

5. நான் மற்றும் என் குடும்பத்தார்கள் சென்றோம். அங்கு போலீஸார் வந்து என்னை விசாரித்தார்கள். நடந்த சங்கதியை சொன்னேன். அவர்கள் சொன்னதை எழுதி என்னிடம் கையெழுத்து கேட்டார்கள். எனக்கு அடிபட்டு இருந்ததால் இடது கை பெருவிரல் ரேகையை வைத்தேன். அந்த புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ.1 ஆகும். எனக்கு 10 நாட்கள் சிகிச்சை அளிக்கப்பட்டது. அதன் பிறகு மதுரை சென்று தல்லாங்குளம் பகுதியில் ஸ்கேன் எடுத்து வந்தோம். கோயம்பத்துார் கங்கா ஆஸ்பத்திரியில் என்னை சேர்த்தார்கள்.

6. அங்கு 15 நாட்கள் சிகிச்சை பெற்றேன். மதுரையில் நான் வந்த உடன் போலீஸார் என்னை விசாரித்தார்கள். சம்பவத்தின் போது நான் அணிந்திருந்த உடைகளை போலீஸார் கேட்டார்கள் நான் கொடுத்தேன். போலீஸார் விசாரித்தார்கள். அருவாள் சுமார் 1.5 அடி இருக்கும். மரக்கட்டை கைபிடி உடன் இருபுறமும் பூன் போட்டிருந்தது. தற்பொழுது காண்பிக்கப்படும் அருவாளை வைத்து தான் 1-வது எதிரி என்னை வெட்டினார். அது சா.பொ.1 ஆகும்.

**எ.த.கு.வி: இல்லை. வழக்கறிஞர் ஆஜர்.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல சுருக்கெழுத்தரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 24.01.2025 அன்று வெள்ளிக்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

GOPINATHAN S

Digitally signed by GOPINATHAN S
Date: 2025.01.24 15:30:58 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி. தேனி.

24.01.2025.